සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)

காலம் 03 மணித்தியாலங்கள்

குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் - (01-III)

විභාග අංකය
Index No / சுட்டெண்
.......................................

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

---

1. i. நிமல் என்பவர் அரசாங்க அலுவலகமொன்றில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவராவார். அவர் நிதிப் பிரிவில் காசுக்குப் பொறுப்பான சிறாப்பரின் கடமையை மேற்கொண்டு வருகின்றார். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அலுவலகத்திற்கு அரசாங்க வருமானமாக கிடைக்கப்பெற்ற பணத்தை ஒரு மாத காலம் அரச கணக்கில் வைப்பிலிடாது அவரது தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிட்டிருப்பதாக கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டுள்ளது. அதிக வேலைப்பழு காரணமாக அவருக்கு இந்தப் பணம் பற்றிய ஞாபக மறதியால் இவ்வாறு நிகழ்ந்துள்ளதாகவும் பின்னர் அந்தப் பணத்தை அரச கணக்கில் முறையாக வைப்பிலிட்டதாகவும் குறிப்பிடுகின்றார். (10 புள்ளிகள்)

   தண்டனைச் சட்டக் கோவைக்கு அமைய நிமல் புரிந்துள்ள குற்றத்தை விளக்குக.

   ii. அஜிதா விலைமதிப்புமிக்க உயர் வகை சமர்த்தியமான நாய் குட்டியொன்றை செல்லப் பிராணியாக வளரப்பதற்கு தனது வீட்டுக்கு கொண்டு வந்தாள். அஜிதாவின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசித்துவந்த சஜித்தாவும் செல்லப் பிராணிகள் மீது அதிகம் விருப்பமுள்ளவளாக காணப்பட்டாள். ஒருநாள் அஜித்தா வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் அங்கு வந்து சஜித்தா அஜித்தாவின் நாய்க் குட்டிக்கு மிகவும் விருப்பமான உணவு வகையொன்றை மோப்பம் பிடிக்கச் செய்துவிட்டு தனது வீட்டுக்குச் சென்றாள். உணவின் மீது விருப்பம் கொண்ட நாய்க்குட்டி அஜித்தாவின் வீட்டிலிருந்து சஜித்தாவின் வீட்டுக்குச் செல்லும் பாதையில் அவளைப் பின்தொடர்ந்து செல்வதை அஜித்தா கண்டாள். பின்னர் சஜித்தா தனது நாய்க்குட்டியை திருடியதாக குற்றஞ்சாட்டி பொலிஸில் முறைப்பாடு செய்தாள். வீட்டின் CCTV காட்சிகளை பரிசோதிக்கும் போது சஜித்தா நாய்க் குட்டிக்கு உணவு வகையொன்றை மோம்பம் பிடிக்கச் செய்யும் காட்சி தெளிவாக உள்ளது.

   தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் சஜித்தா குற்றமிழைத்துள்ளாரா என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

2. i. சான்றுகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் “சான்று” என கருதப்படுவது யாதென்பதை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

ii. நீதிமன்ற நடவடிக்கையின் போது சான்றுகள் விசாரிக்கப்படும் ஒழுங்குமுறையை அதன் படிமுறைகளை குறித்துரைத்து தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

3. I. பின்வரும் தலைப்புக்களின் கீழ் சிறு குறிப்பு எழுதுக.

அ. பதிலை உணர்த்தும் கேள்விகள் (Leading questions) (05 புள்ளிகள்)

ஆ அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளின் மெய்மை பற்றிய ஊகம் (Presumption as to genuineness of certified copies) (05 புள்ளிகள்)

II சாட்சியாளர்களை விசாரிக்கும் போது ஞாபக மீட்டல் (Refreshing memory) என்பதை உதாரணங்களுடன் விபரிக்க. (10 புள்ளிகள்)

4. i. தண்டனைச் சட்டக் கோவைக்கு அமைய “உடந்தையாக இருத்தல்” எனும் குற்றம் தொடர்பில் விளக்குக. (08 புள்ளிகள்)

ii. அஜித் என்பவனை கைதுசெய்வதற்காக பொலிஸ் சார்ஜன் ஜயசுந்தர நீதவான் நீதிமன்றத்தில் பிடியாணை ஒன்றைப் பெற்றுக்கொள்கின்றார். அந்த சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் தரித்திருந்த அஜித்தின் சகோதரன் சுஜித் இது பற்றி அறிந்துகொள்கின்றான். பொலிஸ் சார்ஜன் ஜயசுந்தர அஜித்தை கைதுசெய்வதற்கு வந்த சந்தர்ப்பத்தில் சுஜித் தான் அஜித் எனக்கூறி பொலிஸாரிடம் சரணடைகின்றான்.

அ. அஜித் இங்கு குற்றமொன்றை இழைக்கின்றானா?

ஆ. சுஜித் இங்கு குற்றமொன்றை இழைக்கின்றானா?

இ. பொலிஸ் சார்ஜன் ஜயசுந்தர இங்கு குற்றமொன்றை இழைக்கின்றாரா?

தங்களது விடையை தெளிவுபடுத்துக. (புள்ளிகள் 4x3= 12)

5. பின்வரும் குற்றங்கள் தொடர்பில் சிறு குறிப்பு எழுதுக.

i. திருட்டு (Theft)

ii. கொள்ளை (Robbery)

iii. சொத்தழிப்பு (Mischief)

iv. குற்றமுறையான அத்துமீறல் (Criminal Trespass)

(புள்ளிகள் 5X4 = 20)

*************